# சிற்றூர் அகமண முறை: குமரி மாவட்டச் செட்டியார்களின் மிகத் தனித்துவமான ஒரு சாதிய அசைவியக்கம்

By

**ஜென்ஸிஸ் குமார், மி.**

*இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*குமரி மாவட்டச் செட்டியார்களின் பூர்வீகம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து துவங்குகிறது. மன்னனுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து செட்டியார்கள் குடி பெயர்ந்து தமிழகத்தின் பல்வேறு இடங்களில் தங்கி குறிப்பிட்ட சில எண்ணிக்கையிலானவர்கள் மட்டும் குமரி மாவட்டத்தின் கோட்டாற்றில் வந்து குடியேறினார். குடிப்பெயர்ச்சியின் போது வழியிலேயேப் பல பெண்கள் மரணம் அடைந்தனர். இதனால் குடிப்பெயர்ந்தவர்களிடம் மண உறவுக்கான பெண்கள் எண்ணிக்கை குறைபாடு இருந்தது. இக்குறைபாடு குமரி மாவட்டத்திற்குள் குடி பெயர்ந்த செட்டியார்களிடமும் சமன் செய்யப்படாமலேயே காணப்பட்டன. இதனை இவர்கள் தாங்கள் குடியமர்ந்த பகுதிகளில் வாழ்ந்த பிற சாதிகளோடு மண உறவு கொண்டதன் மூலம் சமன் செய்து கொண்டனர். மேற்குறித்தவாறு பெண்கள் பற்றாக்குறையைச் சமன் செய்து கொண்ட பின்னர் தங்களுக்குள் மண உறவை வைத்துக் கொள்ளும் அளவிற்கு பெண்களின் எண்ணிக்கைப் பெருகியது. அவ்வாறு பெண்கள் எண்ணிக்கைப் பெருகியதும் இவர்கள் அகமணக்குழுவாக மாறினார். அகமண முறையைப் பின்பற்றத் துவங்கிய போது இவர்களுக்குள் அகஅடுக்கு முறையாக்கும் தொழில்படுவதை உணர்ந்தனார். இந்த அக அடுக்கு முறையாக்கம் அவர்கள் மண உறவு கொண்ட பிற சாதிகளின் சமூக மதிப்பின் அடிப்படையில் படிநிலைப்படுத்தப் பெற்றது. இதனால் குமரி மாவட்டச் செட்டியார்கள் ஒருவரோடு ஒருவர் மண உறவு கொள்ளும் வாய்ப்பை இழந்து தனித்தனி உட்ச்சாதிகளாகச் செயல்பட்டனர். இதனால் இவர்களது மண உறவுப் பரப்பு சுருக்கப் பெற்று சிற்றூர் அகமண முறையைப் பின்பற்றும் குழுக்களாக மாறினார். இவ்வாறு குறைவான எண்ணிக்கையைக் கொண்டு குழுத் தூய்மையைத் தக்க வைத்துக் கொள்ள முயன்ற போது இரத்த உறவு உடையவர்களுடனும் மண உறவு ஏற்படுத்த வேண்டியச் சிக்கலுக்கு உள்ளாகினர். இதனால் குமரி மாவட்டச் செட்டியார்கள் பேச்சுவார்த்தை மூலம் இதற்குத் தீர்வு ஏற்படுத்த முயன்றனர். ஆனால் இப்பேச்சுவார்த்தையில் கோட்டாறு பறக்கைச் செட்டியார்கள் கலந்து கொள்ளாததால் தொடர்ந்து அவர்கள் சிற்றூர் அகமண முறைமுறையையே பின்பற்றும் குழுக்களாக செயல்பட்டு வந்தனர். பின்னாளில் அவர்களும் மணவுறவுச் சிக்கலுக்கு உள்ளாகி ஏழூர்ச் செட்டிகளுடன் மண உறவு வைத்துக் கொள்ளும் குழுக்களாகத் தங்களை மாற்றிக் கொண்டு சாதிய அகமணமுறையைப் பின்பற்றத் துவங்கினார்.*

***கலைச்சொற்கள்:*** *சிற்றூர் அகமண முறை, பீலி, ஒடுப்பறை, மூடிய திருமண வட்டம், அக அடுக்கு முறையாக்கம், உயர்குல மணமுறை, சமத் தகுதி மணம்.*

**முன்னுரை**

தமிழகத்தில் பெரு வழக்கில் இல்லாத திருமண முறைகளில் சிற்றூர் அகமண (Village Endogamy) முறை மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று. தமிழகத்தில் இம்மணமுறையைப் பின்பற்றும் குழுவினராகத் திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் வாழ்ந்த கோட்டைப் பிள்ளைமார் மற்றும் செங்கோட்டையில் உள்ள மீனாட்சிபுரம் பகுதியைச் சார்ந்த இஸ்லாமிய மக்கள் கூட்டமும் அறியப்படுகின்றனர். குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் செட்டியார்களிடம் இவ்வழக்கம் நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வருவது கண்டறியப்பெற்று இவ்வழக்கம் அவர்களிடம் எவ்வாறு தோன்றி நிலை பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

குமரி மாவட்டத்தில் செட்டி என அழைக்கப்படும் சாதியினர் இரணியல், கணபதிபுரம், பத்மநாபபுரம், பறக்கை, மிடாலம், குளச்சல் ,திருவிதாங்கோடு, கோட்டாறு ஆகிய ஊர்களில் வாழ்கின்றனர்.

**செட்டியார்களின் வரலாறும் தொன்மமும்**

செட்டியார்களின் வரலாறு காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து தொடங்குகிறது .செட்டியார்களின் பரம்பரைத் தொழில் வாணிபம் ஆகும். இதனைச் சிலப்பதிகாரமும் சுட்டிக்காட்டுகிறது. கோவலனும் கண்ணகியும் செட்டியார் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பது விரிவாக ஆராயப்பட்டுள்ளது (ரகுநாதன் 1984 : 342).

கண்ணகியின் தந்தையும் கோவலனின் தந்தையும் வாணிபம் செய்து வந்தனர் என்பதும், அவர்கள் அரசனுக்கு ஒத்த நிலையில் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தனர் என்பதும் சிலப்பதிகாரச் செய்திகள் ஆகும்.இவ்வாறு உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் பல்வேறான அரசியல் சூழ்நிலைகளினால் தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கும் குடிபெயர நேரிட்டது. அவ்வாறு குடி பெயர்ந்து வந்தவர்களே குமரி மாவட்டத்தில் வாழும் செட்டிசாதியினர்.

புகார் நகரில் செல்வமும் செழிப்பும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வந்த பெருங்குடி வணிக மக்கள் புகார் நகரை விட்டுக் குடி பெயர்ந்ததற்கான காரணம் குறித்து நகரத்தார் வரலாறு குறிப்பிடுகிறது. “ஒரு நாள் சோழ மன்னன் பல்லக்கில் செல்லும் போது தன வணிகர் குலச்சிறுமியர் குடில் அமைத்து விளையாடிக் கொண்டிருக்க அவர்களின் வனப்புமிக்க ஐந்து வயது சிறுமி மேல் ஆசையுற்று அவளை மன்னன் சிறை எடுத்துச் சென்று விட்டான். செட்டியார்கள் அரண்மனை சென்று பெண்ணை விடும்படிக் கேட்டனர். மன்னனோ சிறை எடுத்து வந்த இந்தப் பெண்ணை நான் விட்டு விட்டால் நீங்கள் இவளை உங்கள் குல வழக்கப்படி சிரச்சேதம் செய்து விடுவீர்கள். அவ்வாறு நீங்கள் செய்வீர்களானால் உங்களில் பலர் தலைகளையும் எண்ணாயிரம் பொன் தண்டமும் வாங்குவேன் என்று அச்சுறுத்தி அந்தப் பெண்ணை அனுப்பி வைத்தான்.

வணிகர்களோ அக்காலத்திய தமது குல வழக்கப்படி அந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டு வீடு வந்து சேர்ந்தனர். பின்னர் அரசன் ஆணைப்படி ஏழு பிரிவினரும் ஏழு தலைகளைக் கொடுக்கவும் எண்ணாயிரம் பொன் தண்டம் கொடுக்கவும் தீர்மானித்து அரசனிடம் சென்றனர். அவர்களது துணிவையும் குலச் செருக்கையும் கண்டு வியந்து அவர்களை வேறு வகையில் பழிவாங்க வேண்டும் என்று கருதி அவர்களை மன்னித்து அனுப்பி விட்டான். பின்னர் அவன் அவர்களைப் பல சோதனைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கினான். இறுதியில் சோழ மன்னன் வணிகர் குலப் பெண்களை எல்லாம் சிறையிட சூழ்ச்சி செய்திருந்ததை அறிந்து எண்ணாயிரம் குடும்பத்தினரும் தற்கொலை புரிந்து கொண்டனர். அவ்வாறு தன வணிகர் குடும்பத்தினர் அனைவரும் தற்கொலை புரிந்து கொண்டு ஒருங்கே இறந்த பின்னர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்த ஆண் பிள்ளைகள் மட்டும் உயிர் தப்பிப் பிழைத்து உபாத்தியாயரையும் அழைத்துக் கொண்டு பாண்டிய நாட்டுக்கு வந்து விட்டார்கள். (மேலது : 10 - 14) .அவ்வாறு தப்பிப் பிழைத்தவர்கள் வேளாளப் பெண்களை மணந்து கொண்டு குலம் தழைக்க வைத்தனர். தர்ஸ்டன், நெல்சன் முதலிய காலனிய இனவரைவியலாளர்கள் சோழ மன்னனே இப்பிள்ளைகளையும் தேச பிர்டம் செய்து விரட்டி ஓட்டி இருக்க வேண்டும் என்று இந்நிகழ்ச்சியில் அபிப்பிராயப்படுகின்றனர் (மேலது : 14). பாண்டி நாட்டுக்கு கலியுகம் 4389 ஆம் ஆண்டில் அதாவது கிபி 1288 ஆம் வருடத்தில் நடந்த கலகத்தில் அரியூர்ப் பட்டிணம் எடுபட்டுப் போனதினால் அந்த ஊரில் இருந்த மேலத்தெருவாராகிய அறுபத்தி நான்கு

வைசியர்கள் திசைதப்பி மலையாளம் போய்ச் சேர்ந்து கோட்டாற்றங்கரையில் குடியிருப்பு நிலைமை பெற்று இருந்து வருவதாகக் கூறுகிறது (மேலது : 359-60).

செட்டியார்களின் குடிப்பெயர்ச்சி குறித்து சூரிய நாராயணன் மற்றொரு தகவலைத் தருகின்றார். "காவிரிப்பூம்பட்டினச் செட்டிமார்கள் கிறித்தவ வருடம் 1465-இல் காவேரி நகரை விட்டுச் சித்திரை பூரணச் சந்திரமதியில் ஆயிரத்து ஐநூறு தலைக்கட்டுகளுடன் காட்டிற்குள் வரும்போது கள்ளர் பயத்தாலே தங்கள் நகைகள் எல்லாவற்றையும் கழற்றி புளியங்கொட்டைக்குள் வைத்துக் கட்டினார்கள் ஒரு சாரார். அவர்கள் எல்லோரும் புளியங்கொட்டைச் செட்டியானார்கள். அவர்கள் தங்கிய இடம் ஏரல். பிள்ளையார் (தாலி) தவிர சிறகு உள்பட மற்ற நகைகள் எல்லாம் கழற்றினார்கள். இவர்கள் சிறகு களைந்தான் செட்டி என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இரணியலில் சென்று குடியேறினார்கள். இவர்கள் தம்முடனே ஐம்பொன் லோகப் பிள்ளையார் சிலையைக் கொண்டு சென்றனர். இவர்கள் ஆற்றில் இறங்கும்போது குப்பைக்காகச் சேலையை மடித்துச் செருகினர் ஒரு சாரார். இவர்கள் எல்லோரும் குப்பைக் குறிச் செட்டி என்னும் பெயருடன் வல்லநாட்டில் குடியேறினார்கள். இவர்கள் தம்முடனே வெள்ளைப் பிள்ளையாரைக் கொண்டு வந்தனர். மற்றொரு பிரிவினர் தாலி நீக்கிப் பீலிவரை தான் கழற்றினார்கள். இவர்கள் களைந்தான் செட்டி என்ற பெயரோடு கோட்டாற்றில் குடியேறினார்கள். (களைந்தான் செட்டி என்பது மருவி கார்த்தான் செட்டி என்ற பெயர் இன்றும் வழக்கில் உள்ளது) "நீலகண்டன் 1989 : 12-13).

இப்புலப் பெயர்வில் அறுபத்து நான்கு பேர் மட்டும் திசை தப்பி கோட்டாற்றினுள் வந்து தங்கியதாக நகரத்தார் வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. சூரிய நாராயணன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து குடி பெயர்ந்து வந்த செட்டி சாதியினர் கள்ளர் பயத்தினால் நகைகளை மறைத்து வைத்ததன் அடிப்படையில் அவர்களுக்குள் ஏற்பட்ட உட்குழு முறைகளைப் பற்றிக் கூறுகிறார். எவ்வாறு இருப்பினும் இரண்டு செய்திகளுமே காவிரிப்பும்பட்டினத்தில் இருந்து குடி பெயர்ந்து வந்தவர்களே குமரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் செட்டி சாதியினர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் குமரி மாவட்டத்தில் வாழும் செட்டியார்களிடம் கிடைத்த தரவுகளும் இவற்றிற்குத் துணை சேர்ப்பனவாக அமைந்துள்ளன.

## குமரி மாவட்டத்தில் செட்டியார்கள்

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து குடி பெயர்ந்து தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சென்று தங்கிய செட்டியார்களில் அறுபத்தி நான்கு பேர் திசைத்தப்பி குமரி மாவட்டத்தில் உள்ள கோட்டாற்றில் சென்று தங்கினர் என்பதை அறிந்தோம். இவர்களை அடுத்து மேலும் சிலர் குமரி மாவட்டத்தில் ஒடுப்பறை என்னும் இடத்திலும் சென்று தங்கி உள்ளனர். இவ்விடம் இப்போதைய இரணியல் என்னும் ஊரின் அருகாமையில் உள்ளது. இவர்கள் குமரி மாவட்டத்தில் முதன் முதலில் தங்கிய இடம் ஒடுப்பறை என்பதால் அதை நினைவு கூறும் வகையில் இன்றும் இவ்வினத்தவர்கள் ஒடுப்பறையில் உள்ள நாகரம்மனுக்கு வழிபாடு செய்து வருகின்றனர். இவ்வாறு ஒடுப்பறையில் வந்து தங்கிய செட்டியார்கள் பின்னாளில் தங்கள் குலதெய்வமான சிங்க விநாயகரையும் நகரம்மனையும் உடன் கொண்டு அருகில் உள்ள இரணியல் என்னும் ஊரில் குடியேறினர். செட்டியார்கள் குமரி மாவட்டத்திற்குள் வந்து தங்கிய போது குமரி மாவட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்டிருந்தது. முதன் முதலில் செட்டியார்கள் ஒடுப்பறையில் வந்து தங்கிய நாள் சித்திரைத் திங்கள் ஆயில்ய நட்சத்திரம் கொண்ட ஞாயிற்றுக்கிழமை ஆகும் எனவே அந்நாட்களை நினைவு கூறும் வகையில் இன்று வரை வழிபாடு சித்திரை

மாதமும் ஞாயிற்றுக்கிழமையும் ஆயில்ய நட்சத்திரமும் கூடுகின்ற புண்ணிய தினங்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. இந்த மூன்றும் சேர்ந்து வரும் நாளில் குமரி மாவட்டச் செட்டியார்கள் அனைவரும் ஒடுப்பறையில் கூடி நாகரம்மனுக்கு வழிபாடு செய்து வணங்குவர். இப்போது வழிபாட்டில் கோட்டாறு செட்டியார்களும் கலந்து கொள்கின்றனர். குமரி மாவட்டத்தில் இரு பெரும் கூட்டங்களாக வாழ்ந்து வந்த செட்டியார்களில் இரணியலில் சென்று தங்கியோர் பின்னாளில் மீண்டும் அங்கிருந்து சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து எரனீலு (இரணியல்), பளவடை (கணபதிபுரம்), பப்பனாபுரம் (பத்மநாபபுரம்), பறக்கை, மிடாலாம், கௌச்சை (குளச்சல்), திருவாங்கோடு (திருவிதாங்கோடு), ஆகிய ஏழு ஊர்களில் சென்று தங்கினார். இவ்வாறு ஏழு ஊர்களில் சென்று தங்கியமையால் ஏழூர்ச் செட்டி என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து குடி பெயர்ந்து குமரி மாவட்டத்திற்குள் வந்து தங்கிய காலம் கிபி 13, 14 ஆம் நூற்றாண்டுகள் ஆகும்.

## செட்டியார்களும்-மணவுறவுக் குழுக்களும்

செட்டி சாதிப் பெண்ணை மன்னன் திருமணம் செய்ய விரும்பியதால் இவர்கள் தங்கள் குலப் பெண்களை எல்லாம் கொன்றுவிட்டு தாங்களும் தற்கொலை செய்து கொண்டனர். இதில் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற ஆண் பிள்ளைகள் மட்டும் உயிர் தப்பிப் பிழைத்து உபாத்தியாயரை அழைத்துக் கொண்டு பாண்டி நாட்டுக்கு வந்தனர். இவர்களே வேளாளப் பெண்களை மணந்து கொண்டு குலம் தழைக்க வைத்தனர் என்பது முன்னர் குறிப்பிடப்பெற்றது. இச்செய்தியினை நி.மூராவும் சுட்டிக் கட்டுவதாக பக்தவத்சல பாரதி (2002) குறிப்பிடுகிறார். நகரத்தார்கள் 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் காஞ்சிபுரம் வணிகர்களாக வாழ்ந்தனர் அப்போதைய மன்னனின் கொடுமையை (பெண் கேட்டதால்) எதிர்கொள்ள முடியாமல் 8000 குடும்பத்தார் தற்கொலை செய்து கொண்டனர். 1502 இளைஞர்கள் மட்டும் தப்பிப் பிழைத்தனர் .இவர்கள் வேளாளப் பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் வழி வந்தோரே நகரத்தார் ஆவர் (பக்தவத்சலபாரதி 2002 : 129) இக்குறிப்பும் செட்டியார் சாதியினர்களிடம் பெண்கள் எண்ணிக்கைக் குறைபாடு இருந்ததைத் தெளிவுபடுத்துகின்றது.

செட்டி சாதியினர் வேளாளப் பெண்களை மணந்து கொண்டதன் மூலம் தங்கள் குலம் தழைக்கச் செய்தனர் என்றாலும் அத்தகைய மணங்கள் இவர்களிடம் ஏற்பட்ட பெண்கள் எண்ணிக்கைக் குறைபாட்டை முழுமையாக நிறைவு செய்யவில்லை. எனவே குமரி மாவட்டத்தினுள் வந்து தங்கிய செட்டிச் சாதியினர்களிடமும் பெண்கள் எண்ணிக்கைக் குறைப்பாட்டுச் சிக்கல் இருந்தது. இதனால் குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த செட்டியார்கள் தங்கள் இனப்பாதுகாப்பு கருதியும் அதனைத் தழைக்கச் செய்ய வேண்டி, தாங்கள் தங்கி இருந்த இடங்களின் அருகில் வாழ்ந்த தங்களுடன் மணவுறவு கொள்ள விருப்பம் தெரிவித்த சாதிகளிடம் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டனர். இத்தகைய மணமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் தங்களிடம் காணப்பட்ட பெண்கள் எண்ணிக்கைக் குறைபாட்டைச் சரி செய்து கொண்டனர். இரணியல் மேலத்தெருவிலும் குளச்சலிலும் சென்று தங்கியவர்கள் முக்குவர்களுடனும் பறக்கை ஊரில் சென்று தங்கியவர்கள் நாடார்களுடனும் திருவிதாங்கோடு, இரணியல் கீழத் தெருவில் தங்கியவர்கள் நாயர்களுடனும் கோட்டாறு செட்டித் தெருவில் தங்கியவர்கள் வெள்ளாளர்களுடனும் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டனர்.

## சாதிக் கலப்பும் கிளைச்சாதிகளின் தோற்றமும்

சாதியப் படிநிலையில் உயர்ந்த நிலையில் மதிக்கப்படும் சாதியினருடன் திருமண உறவை

ஏற்படுத்திக் கொண்டவர்கள் அடுக்கு முறையில் உயர்ந்த இடத்திலும், சமத் தகுதி உடையவர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட கூட்டத்தினர் அடுக்கு முறையில் அடுத்த நிலையிலும் சாதிப் படிநிலையில் தாழ்ந்த சாதியினருடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட கூட்டத்தினர்கள் அடுக்கு முறையில் இறுதி நிலையிலும் வைத்து மதிக்கப்பட்டனர். சான்றாக வெள்ளாளர்களுடன் மண உறவை ஏற்படுத்திக் கொண்ட கோட்டாறு செட்டியார்கள் அடுக்கு முறையில் முதலிடத்திலும், நாயர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட திருவிதாங்கோடு, இரணியல் கீழத் தெருவைச் சேர்ந்தவர்கள் அடுக்கு முறையில் இரண்டாம் நிலையிலும், நாடார்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட பறக்கைச் செட்டி சாதியினர் அடுக்கு முறையில் மூன்றாம் இடத்திலும் முக்குவர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட இரணியல் மேலத்தெரு, குளச்சல் பகுதியில் வாழும் செட்டியார்கள் அடுக்கு முறையில் நான்காம் இடத்திலும் வைத்துப் பார்க்கப்பட்டனர். எனவே இவர்களுக்குள் மணவுறவு கொள்ளும் வாய்ப்பு துண்டிக்கப்பட்டு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தனித்தனி குழுவாயினார்.

ஆரம்பக் காலங்களில் செட்டி என்ற பொதுவான சாதிப் பெயரில் அடையாளப்படுத்தப்பட்ட குமரி மாவட்டச் செட்டியார் அனைவரும் சாதி மீறிய மணமுறையினால் தங்களுக்குள் ஏற்பட்ட பிரிவினைகளுக்குப் பின்னர் அப் பிரிவினையை அடையாளப்படுத்தும் வகையில் தங்கள் சாதிப் பெயருடன் தாங்கள் மணம் செய்து கொண்ட சாதியினர் பெயரையும் சேர்த்து அழைக்கப்பட்டனர். அதாவது வெள்ளாளர்களுடன் மண உறவு கொண்ட கோட்டார் செட்டியார் வெள்ளாஞ்செட்டி எனவும் நாயர்களுடன் திருமணம் செய்து கொண்டவர்கள் நாயச்செட்டி எனவும் நாடார்களுடன் திருமண உறவை ஏற்படுத்தியவர்கள் சாணாஞ்செட்டி எனவும் முக்குவர்களுடன் திருமண உறவை ஏற்படுத்தியவர்கள் முக்குவச் செட்டி எனவும் அழைக்கப்பட்டனர். இதனால் குமரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வாழும் செட்டியார்கள் கூட்டம் ஒவ்வொன்றும் சீரான மணவழி உறவினை கொண்ட ஒற்றைக் குழு அல்ல என்பதையும் ஒன்றோடு ஒன்று ஒட்ட முடியாதவாறு அடிப்படை வேற்றுமைகளைக் கொண்ட குழுக்களாக இருப்பதையும் எடுத்துக்காட்டுகின்றன. எனவே குமரி மாவட்டச் செட்டியார்களிடம் ஏற்பட்ட சாதி மீறிய திருமணங்களுக்குப் பின்னர் இவர்களுக்குள் எந்தவித உறவுகளும் இல்லாமல் இருந்தது. ஆகவே இவ்வகைத் திருமணங்களை நிறுத்திக் கொண்ட குமரி மாவட்டச் செட்டியார்கள் அனைவரும் தங்கள் ஊருக்குள் உள்ள செட்டியார்களிடம் மட்டுமே மண உறவு கொள்ளும் சிற்றூர் அகமணக் குழுவினர்களாக மாறினர்.

இதனால் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகினர். குமரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வரும் செட்டி சாதியினர் அனைவரும் சிறுசிறு எண்ணிக்கை உடைய கூட்டத்தினராகவே காணப்பட்டனர். இதனால் தம் ஊருக்குள் வாழும் தன் இனத்தவர்களிடம் மட்டுமே மணவுறவு கொள்ள வேண்டும் என்று இவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதனால் ஒரு குறிப்பிட்ட சிறிய கால இடைவெளிக்கு உள்ளாகவே சிற்றூர்களில் வாழ்ந்த இக்கூட்டத்தினர்கள் அனைவரும் தங்களுக்குள் நெருங்கிய உறவு உடையவர்களாக மாறினார். எனவே மீண்டும் மீண்டும் சிற்றூர் அகமணமுறை வழக்கினைத் தொடர்ந்து வரும் காலங்களிலும் கடைபிடிக்க முயன்ற போது மண உறவு கொள்ளத் தகாத நெருங்கிய உறவு உடையவர்களோடும் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய சூழல் உருவானது. எனினும் சிற்றூருக்குள் மட்டுமே மணம் செய்தல் வேண்டும் என்ற நெருக்கடி கருதி அத்தகைய உறவு முறைச் சிக்கல்கள் ஏற்படும் போது தங்களுக்குச் சாதகமான

முடிவுகளை ஏற்படுத்தி திருமணங்களை நடத்திக் கொள்வது வழக்கம் இதன் அடிப்படையிலேயே, 'செட்டி முறை எட்டு முறை எட்டு முறையும் கெட்ட முறை' என்ற பழமொழி இச்சாதியினர் குறித்து உருவாகியதாகக் கூறுகின்றனர்.

ஆரம்ப நிலையில் இத்தகையத் திருமண உறவுகள் ஏற்படுத்துவதை இயல்பாகக் கொண்டிருந்தனர். ஆனால் குமரி மாவட்டத்தில் கல்வி கற்கும் உரிமை பரவலாக்கப்பட்டு இவர்கள் கல்வி அறிவு பெற்ற போதும் அறிவியல் வல்லுநர்கள் இரத்த உறவுக்குள் மணம் செய்து கொள்வதினால் ஏற்படும் நோய்களாக மனத்தளர்ச்சி, மூளை வளர்ச்சி குறை, ஊனம், பலகீனம் போன்றவை உருவாகும் என்று அறிக்கைகள் வெளியிட்ட போது தாங்கள் கடைபிடித்து வந்த சிற்றூர் அகமணமுறை வழக்கத்தைத் தொடர்ந்து கடைபிடிக்கத் தயக்கம் காட்டினர். எனவே இச்சிக்கல்களில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள மீண்டும் முன்பு போல் தாங்கள் வாழும் இடங்களில் உள்ள பிற சாதிகளுடனான மண உறவுகளைத் தொடர முயற்சி மேற்கொண்டனர். ஆனால் அச்சாதியினர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்தனர். தங்களுக்குச் சிக்கல்கள் உருவாகும் காலங்களில் தங்களைப் பயன்படுத்திக் கொள்வதும் பின்னர் சிக்கல் சரி செய்யப்பட்டவுடன் அவர்களாகவே தங்களை விலக்கிக் கொள்வதும் இப்போது இவர்களை சிந்திக்க செய்தது. எனவே செட்டியார்கள் மீண்டும் தொடர முற்பட்ட சாதிக் கலப்பு உறவுகளுக்கு மறுப்பு தெரிவித்தனர்.

குமரி மாவட்டச் செட்டியார்களின் சாதி மீறிய மண விருப்பத்திற்கு மற்ற சாதியினர் மறுப்பு தெரிவித்ததால் பெரும் சிக்கல்களுக்கு உள்ளாகினர் .அதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள குமரி மாவட்டச் செட்டியார் அனைவரும் தங்களுக்குள் கூடி பேச்சு வார்த்தை நடத்த 1950 களில் திட்டமிட்டனர். எனவே குமரி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வந்தச் செட்டியார்கள் அனைவரும் அது தொடர்பாகப் பேச அழைப்பு விடுக்கப்பட்டனர். பேச்சுவார்த்தையில் கோட்டாறு, பறக்கை ஊரில் வாழும் செட்டியார்கள் மட்டும் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் கோட்டாறு, பறக்கை ஊரில் வாழும் செட்டியார்கள் குமரி மாவட்டத்தின் ஏனைய இடங்களில் வாழும் செட்டியார்களை விட எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்பட்டனர். எனவே குமரி மாவட்டத்தில் வாழும் ஏனைய செட்டியார்களுக்கு உருவான தகா உறவுத் திருமணம் என்ற சிக்கல் கோட்டாறு பறக்கை ஊர்களில் வாழும் செட்டியார்களுக்குக் குறிப்பிட்ட அக்காலகட்டத்தில் ஏற்படவில்லை. இதனால் இவ்விரு பிரிவினர்களும் ஏனைய குமரி மாவட்டத்தில் வாழும் செட்டி சாதியினர்கள் எதிர்கொண்டச் சிக்கலைக் குறித்து விவாதிக்க விடுத்த அழைப்பில் சிக்கலை எதிர்கொள்ளாத தாங்கள் ஏன் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பேச்சுவார்த்தையைப் புறக்கணித்தனர் அழைப்பை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட குமரி மாவட்டச் செட்டியார்கள் அனைவரும் தங்களுக்குள் கூடி விவாதித்தனர். அதில் குமரி மாவட்டத்துச் செட்டியார்கள் ஆகிய நாம் அனைவரும் இனிவரும் காலங்களில் சாதிக் கலப்பு மணம் மூலம் தங்களிடையே பிரிவினையை உண்டாக்கிய உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற அடுக்கு முறையினை விலக்கி விட்டு அனைவரும் சமத்தகுதி உடையவர்கள் என்ற மதிப்பீட்டைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் நாம் அனைவரும் தற்போது மேற்கொண்டு வரும் சிற்றூர் அகமண முறை வழக்கினை விலக்கிவிட்டு நமக்குள் எவ்வித பாகுபாடும் இன்றி தங்களுக்குள்ளாகவே திருமண உறவுகளை ஏற்படுத்தும் குழுவினர்களாக மாற வேண்டும். இதன் மூலம் தங்களிடையே உருவான தகா உறவுத் திருமணம் ஏற்படும் சிக்கலைத் தவிர்க்க

இயலும் என்று முடிவு செய்து அவ்வாறு செயல்படவும் துவங்கினர்.

பின்னாளில் ஏழூர் செட்டிச்சங்கம் என்ற ஒரு அமைப்பை 1952 இல் நிறுவி தங்களுக்கிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொண்டனர். இதன் மூலம் குமரி மாவட்டத்தில் செட்டியார்கள் அனைவரும் சிற்றூர் அகமணமுறை வழக்கில் இருந்து விடுபட்டு சாதி அகமண முறை வழக்கத்தைக் கடைபிடிக்கும் குழுவினர்களாக மாறினார். எண்ணிக்கை மிகுதியால் பேச்சுவார்த்தையைப் புறக்கணித்த கோட்டாறு, பறக்கை ஊர்களைச் சார்ந்த செட்டியார்கள் தொடர்ந்து சிற்றூர் அகமணமுறை வழக்கையே கடைப்பிடித்து வந்தனர். இந்நிலையில் குறிப்பிட்ட சில காலங்களுக்கு பின்னர் இவர்களிடமும் தகா உறவுத் திருமணம் ஏற்படும் சூழல் உருவானது. இவர்கள் ஏனைய குமரி மாவட்டத்தில் வாழும் செட்டியார்களை விட எண்ணிக்கையில் அதிகமாக இருந்ததால் அவர்கள் முன்கூட்டியே எதிர்கொண்ட சிக்கலைக் கோட்டாறு, பறக்கை செட்டியார்கள் காலம் தாழ்த்தி சந்திக்க நேர்ந்தது. எனவே அதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள சிலர் சிற்றூர் அகமணமுறை வழக்கத்தை மீறும் மனம் உடையவர்களாக மாறினர். இதனை அறிந்த கோட்டாறு, பறக்கைச் செட்டி இன மூதாதையர்கள் தாம் இதுநாள் வரை கடைபிடித்துக் காத்து வரும் சிற்றூர் அகமண முறை வழக்கத்தை தன் சாதியினர்கள் புறக்கணித்தனர் எனில் எதிர்காலத்தில் தம் கூட்டத்தினருக்கான தனித்த அடையாளம் அழிவதுடன் அவர்கள் துண்டுபட்டுப் போவதும் உறுதி. மேலும் தன் இனக்கூட்டம் பாதுகாப்பு அற்றதாகவும் ஆகிவிடும் என்ற அச்சம் காரணமாக சிற்றூர் அகமணமுறை வழக்கத்தைக் கட்டுப்பாடுகள் மூலம் சந்ததிகளிடம் நிலை நிறுத்த முனைந்தனர். கட்டுப்பாடுகளை மீறுவோருக்குத் தண்டனைகள் அபராதம் விதிக்கும் வழக்கமும் இவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இவற்றின் மூலம் சிற்றூர் அகமண முறை வழக்கத்தை மீண்டும் தன் சாதிக் கூட்டத்தினரிடம் கோட்டாறு பறக்கை செட்டியார்கள் தொடர்ந்து நிலைநிறுத்தினர். கட்டுப்பாடுகள் மூலம் சிற்றூர் அகமணமுறை வழக்கினை நிலை நிறுத்த முயன்றதால் ஏற்பட்ட சமூகச் சிக்கல்கள் கோட்டார் செட்டியாரை கட்டுப்பாட்டை மீறும் சூழலுக்குக் கொண்டு சென்றது. இதனால் கோட்டார் செட்டியார்கள் இடையே பிரிவினைகள் தோன்றும் நிலை உருவானது. எனவே சிற்றூர் அகமண முறை வழக்கினைத் தொடர்ந்து கடைபிடிப்பதால் விளையும் தீமைகளுக்கு அஞ்சி கோட்டார் செட்டியார்களும் ஏழூர் செட்டிச் சங்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர்.ஆனால் பறக்கைச் செட்டியார்கள் தொடர்ந்து சிற்றூர் அகமண முறையைக் கடைப்பிடித்து வரும் கூட்டத்தினராகவே இருந்து வந்தனர். கோட்டார் செட்டியினர் ஏழூர் செட்டிச் சங்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்ட பின்னர் பிற ஏழூர் செட்டியாருடன் திருமண உறவை ஏற்படுத்தினர். ஆனால் இத்தகையத் திருமணங்களில் பிற ஏழூர் செட்டிகளிடம் பெண் எடுக்கும் மண உறவுகளை மட்டும் இவர்கள் மேற்கொண்டனர். பெண் கொடுக்கும் மண உறவுகளைத் தங்கள் ஊருக்குள் வாழும் தன் சாதியினரிடம் மட்டும் செய்து வந்தனர். ஏனெனில் கோட்டாறு செட்டி சாதியினர் பெயரில் பல கோடி மதிப்புள்ள அசையும் அசையா சொத்துக்கள் இருந்தன. கோட்டார் செட்டியார் அனைவரும் வசிக்கின்ற வீடுகளும் செட்டித்தெருவும் சமுதாயத்தின் பெயரிலேயே காணப்பட்டன. இந்தச் சொத்துக்களை கோட்டார் செட்டியினர் பாரம்பரியமாக அனுபவிக்க மட்டுமே இயலும். பிறருக்கு விற்பனை செய்வதற்கோ நன்கொடையாகக் கொடுப்பதற்கோ தனிப்பட்ட நபர் எவருக்கும் உரிமை கிடையாது. ஆனால் ஏழூர் செட்டிகளுடன் திருமண உறவுகளை மேற்கொள்ளும் நிலையில் அவர்களும் தங்களுக்கு உரிமை உடைய சொத்துக்களில் உரிமை கொண்டாடவும் அனுபவிக்கவும்

வாய்ப்பு ஏற்படும் நிலை உருவாகும். அதாவது கோட்டாறு செட்டி இனப்பெண்களை பிற ஏழூர் செட்டி சமூகத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு மணமுடித்துக் கொடுக்கும் நிலையில் வீட்டில் ஆண் வாரிசு இல்லையெனில் பெண்ணின் தாய் தந்தையர் பாரம்பரியமாக அனுபவித்து வந்த வீடு அவர்களின் காலத்துக்குப் பின் அவர்களின் பெண்களையே வந்து சேரும் இதனால் வீட்டை அனுபவிக்கும் உரிமை பிறஏழூர் செட்டிச்சங்கத்தைச் சேர்ந்த ஆடவனுக்குக் கிடைக்கப்பெறும். மேலும் கோட்டாறு செட்டி சமுதாய எல்லையினுள் பிற ஏழூர் செட்டி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வாழ நேரிடும் போது அவர்களைக் கோட்டாறு செட்டி சமுதாய நிர்வாகிகளால் தம் இனத்தவர்களைக் கட்டுப்படுத்துவது போல் கட்டுப்படுத்தவும் இயலாது. இதுபோன்ற சிக்கல்களில் இருந்து தங்களுக்கு உரிமை உடைய சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் கோட்டாறு செட்டியினர் பெண் எடுத்தல் என்ற ஒரு திசைப் போக்கான மணமுறையை மட்டும் கடைப்பிடிக்கத் துவங்கினர். இதனால் கோட்டார் செட்டிப் பெண்களின் திருமணமுறை சிற்றூர் அகமணமுறை வழக்காகவும் ஆண்களின் திருமண முறை சாதி அகமணமுறை வழக்காகவும் அமைந்தன.

கோட்டாறு செட்டி சாதியினர் கடைப்பிடித்து வந்த இந்த ஒரு திசைப் போக்கான மணமுறைக்கு ஏழூர் செட்டி சாதியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். கோட்டாறு செட்டியினர் ஏழூர்செட்டிகளுடன் இணைந்து கொண்ட பின்னரும் முன்னைய அடுக்கு முறையினை நினைவு கூறும் மனம் உடையவர்களாகவேக் காணப்பட்டனர். எனவே பெண் கொடுத்தலைத் தங்களுக்குள்ளேயும் பெண் எடுப்பதை ஏழூர் செட்டிகளிடமும் மேற்கொண்டு வந்தனர். இது கோட்டாறு செட்டியினர் ஏழூர் செட்டிகளுடன் இணைந்து இருந்தாலும் அவர்களை விட சமூக மதிப்பீட்டில் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது என்று கருதினர். ஏனெனில் குமரி மாவட்டச் செட்டியார்களிடம் பெண் எடுப்பவர்கள் உயர்ந்த குழுவினராகவும் பெண் கொடுப்பவர் தாழ்ந்த குழுவினராகவும் கருதப்படும் வழக்கம் வழக்கத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வட இந்திய சாதிகளின் உட்பிரிவுகளாக விளங்கும் குலங்கள், கோத்திரங்கள், கூட்டம், பரம்பரை போன்றவை ஒரு படி நிலையில் அமைந்து அவற்றுக்குள் உயர்வு தாழ்வு என்று வரிசைப் படுத்தப்படுகின்றன. இவ்வரையறையின் படி பெண்களை உயர் குலத்தைச் சேர்ந்த மணமகனுக்குக் கொடுக்க வேண்டும். இதனை வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் பெண் எடுக்கும் போது அவளைக் கீழ்க்குலத்தில் இருந்தும் பெண் கொடுக்கும் போது அவளை உயர் குலத்திற்கும் கொடுக்க வேண்டும். (இண்டன் 1976: கார்வே 1965 :போக்காக் 1954: சூர் 1973: இந்த ஒரு திசைப் போக்கில் பெண் கொடுத்தல் என்ற விதி இணை நிலையாகப் பெண் கொடுப்போர் தகுதி குறைந்த குழுவினராகவும் பெண் எடுப்போர் தகுதி உயர்ந்த குழுவினராகவும் படிநிலைப்படுவதைப் பிரதிபலிக்கிறது. (பக்தவத்சல பாரதி 2002: 60 - 65). மேற்குறிப்பிட்டுள்ள சான்றுகளின் மூலம் வட இந்தியப் பகுதிகளில் பெண் கொடுத்தல் எடுத்தல் என்ற நிலையில் மேற்கொள்ளப்படும் உயர்வு தாழ்வு என்ற கருத்தாக்கத்தைக் குமரி மாவட்டச் செட்டிகளும் கடைப்பிடிப்பதை அறிய முடிகிறது

எனவே சொத்துப் பாதுகாப்பு கருதி கோட்டாறு செட்டிகள் மேற்கொண்ட இந்த ஒரு திசைப் போக்கான மணமுறைக்குப் பிற ஏழூர் செட்டியினர் மறுப்பு தெரிவித்தனர். ஆனால் கோட்டாறு செட்டியினர் சொத்துப் பாதுகாப்பினை மட்டுமே தங்களுடைய முதன்மையான நோக்கமாகக் கொண்டதால் மீண்டும் தங்களைச் சிற்றூர் அகமண முறையைக் கடைபிடிக்கும் கூட்டத்தினராக மாற்றியதுடன் அத்தகைய மணமுறையைக் கட்டுப்பாடாகவும் கொண்டு வந்தனர். இதனைப்

பிற்கால சந்ததியினரும் தொடர்ந்து நிலை நிறுத்தினார்.

**முடிவுரை**

குமரி மாவட்டத்தின் பல்வேறு ஊர்களில் வாழும் செட்டியார்களை மண உறவின் அடிப்படையில் இரு பெரும் குழுக்களாகப் பிரிக்கலாம். ஒன்று சிற்றூர் அகமணமுறையைப் பின்பற்றும் குழு மற்றொன்று சாதி அகமண முறையைப் பின்பற்றும் குழு. கோட்டாறு செட்டி பறக்கைச் செட்டி ஆகிய இரு குழுக்களும் சிற்றூர் அகமணமுறையைப் பின்பற்றும் குழுக்கள் ஆகும். ஏழூர்ச் செட்டி என்னும் பிரிவுக்குள் அடங்கும் ஏனைய குழுக்கள் அகமணமுறையைப் பின்பற்றும் குழுக்கள் ஆகும். அகமணமுறையைப் பின்பற்றும் ஏழூர் செட்டிகளும் சிறிது காலம் புறமணக் குழுக்களாகவும் இருந்தனர். சிற்றூர் அகமணமுறையில் ஏற்பட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள ஏழூர்ச் செட்டி என்ற அமைப்பு உருவாக்கப் பெற்று புறமண உறவில் மூலம் தோன்றிய அடுக்கு அகமணமுறையை நிலை நிறுத்தி சிற்றூர் அகமணமுறையில் இருந்தும் கலப்பு மணமுறையிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டனர். ஏழூர் செட்டி களின் இவ்வளர்ச்சிப் போக்கு அவர்களை முழுமையான பெருங்கூட்டமாக அடையாளப் படுத்தியதைக் காண முடிந்தது. கோட்டாறு செட்டிகளுக்குப் பாரம்பரிய சொத்தும் பறக்கைச் செட்டிகளுக்கு மண உறவில் ஏழூர்ச் செட்டிகளைச் சார்ந்து இருக்கத் தேவையில்லை என்ற உணர்வும் இருந்தமையால் ஏழூர்ச்செட்டி அமைப்பில் இணைய இயலவில்லை. எனவே இவர்கள் தொடர்ந்து சிற்றூர் அகமண முறையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாயினர்.

**பார்வை நூல்கள்**


சதாசிவம், சே. சேரநாடும் செந்தமிழ் நாடும், சசி நிலையம், நாகர்கோவில், தமிழ்நாடு, 1972.

நீலகண்டன், தா., கோட்டாறு செட்டியார் வரலாறும் வாழ்வியலும், மகளிர் அச்சகம், நாகர்கோவில், தமிழ்நாடு, 1989.

பாரதி, பக்தவச்சல., தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம், தமிழ்நாடு, 2002.

பரமசிவன். தொ. அறியப்படாத தமிழகம், (முதல் பதிப்பு) ஜெயா பதிப்பகம், பாளையங்கோட்டை, தமிழ்நாடு, 1997.

ரகுநாதன், தொ. மு. சி. இளங்கோவடிகள் யார்?, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம், தமிழ்நாடு, 1984.

Thurston, Edgar & K.Rangachari. Castes and Tribes of Southern India (vol. 7), Government press, Madras, 1909.


## To cite this article

*****************


Jencis kumar, M. (2026). சிற்றூர் அகமண முறை: குமரி மாவட்டச் செட்டியார்களின் மிகத் தனித்துவமான ஒரு சாதிய அசைவியக்கம். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 9*(1), 49-58.


****************************************************************************************

**ABOUT THE AUTHOR**



***Dr Jencis Kumar M.*** *is currently working as an Associate Professor in the Department of Tamil at University College, Palayam, Thiruvananthapuram, Kerala, India. He earned his Ph.D. from Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India, with a dissertation titled "Chettiyargalin Kudippearchiyum Chittoor Agamanakkulu Uruvakkamum." He has published 25 research articles in various academic journals, including 10 UGC-referred journals. He has also successfully completed one Orientation Programme and three Refresher Courses at the Human Resource Development Centre (HRDC), Kariavattom, Kerala, India.*

*******************************************************************************************